Click Here to Learn more: https://bit.ly/3is7Z75




Click Here : https://bit.ly/3is7Z75    Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75

## சுராவின்

# தமிழ் உரைநூல்





## 10ஆம் வகுப்பு



**இலவசம்**
சுய மதிப்பீடு பயிற்சி நூல்

### சிறப்பம்சங்கள்

- புதிய பாடதிட்டத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- புதிய பாடநூல் திட்டத்தின்படி, பாடப்பகுதிகளிலுள்ள அனைத்து வினாக்களுக்கும் எளிமையான விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம். கூடுதல் வினா – விடைகள், மொழித்திறன் பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினா 2019 (அ.மா.வி.), காலாண்டுத் தேர்வு 2019, அரையாண்டுத் தேர்வு 2019, அரசு துணைத்தேர்வு செப்டம்பர் 2020 வினாக்கள், PTA வினாக்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- செப்டம்பர் 2020 அரசு துணைத்தேர்வு வினாத்தாள் கொடுக்கப்பட்டுள்ளது.



சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75

2021-22 பதிப்பு
© வெளியீட்டாளர்கள்

ISBN : 978-81-8449-513-3
குறியீட்டு எண் : SG 42

எழுதி வழங்கியவர்கள்
செ. சசிகலாதேவி, M.A., M.Phil.,(Tamil) PGDLA
கி. லதா, M.A., B.Ed., M.Phil.,

தலைமை அலுவலகம்:
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
☎ 91-44-4862 9977, 486 27755
81242 01000/ 81243 01000
வாட்ஸ்அப்: 8124201000
**e-mail :** orders@surabooks.com,
**website :** www.surabooks.com

**Our Guides for XI, XII Standard**

- Sura's Tamil
- Sura's English
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Biology (EM/TM)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

Also available 1 Mark Q & A (EM/TM),2,3 Marks (EM/TM) and 5 Marks Q & A (EM / TM) for all Subjects.

மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு
புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 80562 94222 / 80562 15222
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75

# பதிப்பாசிரியர் உரை

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.** – திருவள்ளுவர்

**எங்கள் வாழ்த்திற்குரிய**
**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** பத்தாம் வகுப்பிற்கான **தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம், கூடுதல் வினா விடைகள், மொழித்திறன் பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

**மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.**

**இறையருளை வேண்டுகிறோம்!**

**நலமே விளைக! . . .**

- பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பதிப்பகம்)

www.surabooks.com





Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75

# பொருளடக்கம்

மனப்பாடச் செய்யுள் பகுதி ........................................................ 1-4

| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 1. | மொழி<br>அமுதஊற்று | அன்னை மொழியே! (செய்யுள்)<br>தமிழ்ச்சொல் வளம் (உரைநடை)<br>இரட்டுற மொழிதல் (செய்யுள்)<br>உரைநடையின் அணிநலன்கள் (துணைப்பாடம்)<br>எழுத்து, சொல் (இலக்கணம்) | 5-40 | ஜூன் |
| 2. | இயற்கை, சுற்றுச்சூழல்<br>உயிரின் ஓசை | கேட்கிறதா என் குரல்! (உரைநடை)<br>காற்றே வா! (செய்யுள்)<br>முல்லைப்பாட்டு (செய்யுள்)<br>புயலிலே ஒரு தோணி (துணைப்பாடம்)<br>தொகைநிலைத் தொடர்கள் (இலக்கணம்) | 41-80 | ஜூன் |
| 3. | பண்பாடு<br>கூட்டாஞ்சோறு | விருந்து போற்றுதும்! (உரைநடை)<br>காசிக்காண்டம் (செய்யுள்)<br>மலைபடுகடாம் (செய்யுள்)<br>கோபல்லபுரத்து மக்கள் (துணைப்பாடம்)<br>தொகாநிலைத் தொடர்கள் (இலக்கணம்)<br>திருக்குறள் (வாழ்வியல்) | 81-128 | ஜூலை |
| 4. | அறிவியல், தொழில்நுட்பம்<br>நான்காம் தமிழ் | செயற்கை நுண்ணறிவு (உரைநடை)<br>பெருமாள் திருமொழி (செய்யுள்)<br>பரிபாடல் (செய்யுள்)<br>விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை (துணைப்பாடம்)<br>இலக்கணம் - பொது (இலக்கணம்) | 129-166 | ஜூலை |
| 5. | கல்வி<br>மணற்கேணி | மொழிபெயர்ப்புக் கல்வி (உரைநடை)<br>நீதிவெண்பா (செய்யுள்)<br>திருவிளையாடற் புராணம் (செய்யுள்)<br>புதிய நம்பிக்கை (துணைப்பாடம்)<br>வினா விடை வகை, பொருள்கோள் (இலக்கணம்) | 167-212 | ஆகஸ்ட் |




Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 6. | கலை, அழகியல், புதுமைகள் **நிலா முற்றம்** | நிகழ்கலை **(உரைநடை)** | 213-270 | ஆகஸ்ட் |
| | | பூத்தொடுத்தல் **(செய்யுள்)** | | |
| | | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் **(செய்யுள்)** | | |
| | | கம்பராமாயணம் **(செய்யுள்)** | | |
| | | பாய்ச்சல் **(துணைப்பாடம்)** | | |
| | | அகப்பொருள் இலக்கணம் **(இலக்கணம்)** | | |
| | | திருக்குறள் | | |
| 7. | நாகரிகம், நாடு, சமூகம் **விதைநெல்** | சிற்றகல் ஒளி(தன் வரலாறு) **(உரைநடை)** | 271-324 | அக்டோபர் |
| | | ஏர் புதிதா? **(செய்யுள்)** | | |
| | | மெய்க்கீர்த்தி **(செய்யுள்)** | | |
| | | சிலப்பதிகாரம் **(செய்யுள்)** | | |
| | | மங்கையராய்ப் பிறப்பதற்கே...**(துணைப்பாடம்)** | | |
| | | புறப்பொருள் இலக்கணம் **(இலக்கணம்)** | | |
| 8. | அறம், தத்துவம், சிந்தனை **பெருவழி** | சங்க இலக்கியத்தில் அறம் **(உரைநடை)** | 325-366 | அக்டோபர் |
| | | ஞானம் **(செய்யுள்)** | | |
| | | காலக்கணிதம் **(செய்யுள்)** | | |
| | | இராமானுசர் (நாடகம்) **(துணைப்பாடம்)** | | |
| | | பா-வகை, அலகிடுதல் **(இலக்கணம்)** | | |
| 9. | மனிதம், ஆளுமை **அன்பின் மொழி** | ஜெயகாந்தம் (நினைவு இதழ்) **(உரைநடை)** | 367-408 | நவம்பர் டிசம்பர் |
| | | சித்தாளு **(செய்யுள்)** | | |
| | | தேம்பாவணி **(செய்யுள்)** | | |
| | | ஒருவன் இருக்கிறான் **(துணைப்பாடம்)** | | |
| | | அணிகள் **(இலக்கணம்)** | | |
| **மொழித்திறன் பயிற்சிகள்** சந்திப்பிழையை நீக்கி எழுதுதல், வழூஉச்சொற்களைத் திருத்தி எழுதுதல், வாக்கியப் பிழைகளைத் திருத்துதல், மரபுப் பிழையை நீக்கி எழுதுதல், உவமை, உருவக மாற்றுதல், தொகைச் சொற்களை விரித்து எழுதுதல், ஒருமை, பன்மை பிழைகளை நீக்கி எழுதுதல், பிறமொழிச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுதல், நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுதல், வேற்றுமை உருபுகளை இணைத்து எழுதுதல், இரு பொருள் தரும் ஒரு சொல்(அ) இருபொருள் தருக(அ) பல பொருள் குறிக்கும் ஒரு சொல் எழுதுதல், தொடரை மாற்றி அமைத்தல், அரபு எண்களைத் தமிழ் எண்களாக மாற்றி எழுதுதல், கவிதைகள், இலக்கிய நயம் பாராட்டல், பழமொழி - மொழிபெயர்ப்பு, மொழியாக்கம், கடிதம் எழுதுதல், பொதுக் கட்டுரைகள். | | | 409-450 | |
| அரசு துணைத்தேர்வு செப்டம்பர் 2020 வினாத்தாள் | | | 451-456 | |




Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

## DIRECT DEPOSIT

| | | | |
|---|---|---|---|
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **36550290536** | Our A/c No. | : **21000210001240** |
| Bank Name | : **STATE BANK OF INDIA** | Bank Name | : **UCO BANK** |
| Bank Branch | : PADI | Bank Branch | : Anna Nagar West |
| IFSC | : SBIN0005083 | IFSC | : UCBA0002100 |
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **6502699356** | Our A/c No. | : **1154135000017684** |
| Bank Name | : **INDIAN BANK** | Bank Name | : **KVB BANK** |
| Bank Branch | : ASIAD COLONY | Bank Branch | : Anna Nagar |
| IFSC | : IDIB000A098 | IFSC | : KVBL0001154 |

After Deposit, please send challan and order to our address.
email : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**.

The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

## STUDENTS :

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040.
Phones : 044-4862 9977, 044-486 27755.
Mobile : 96001 75757/ 81242 01000/81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com

www.surabooks.com



Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75

# மனப்பாடச் செய்யுள்

இயல் - 1

## அன்னை மொழியே

### அழகார்ந்த செந்தமிழே!

### கனிச்சாறு (தொகுதி–1)

பிடிஏ–4, 6; அரையாண்டுத் தேர்வு 2019

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

பிடிஏ–1

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

இயல் - 2

## முல்லைப்பாட்டு

பிடிஏ–3; காலாண்டுத் தேர்வு 2019

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்.

– அடி 12–17

– நப்பூதனார்

இயல் - 3

## காசிக்காண்டம்

பிடிஏ–2, 5

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே.

இல்லொழுக்கம், (பா எண் : 17)

– அதிவீரராம பாண்டியர்

## திருக்குறள்

### மெய் உணர்தல்(36)

குறள் எண்

4. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.



Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75



## பெரியாரைத் துணைக்கோடல்(45)

8. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். பிடிஏ–4,5

## கண்ணோட்டம்(58)

11. பண்ணென்னாம் பாடற் கியைபின்றேல்; கண்ணென்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண். அ.மா.வி 2019; பிடிஏ–2

## ஆள்வினை உடைமை(62)

14. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

16. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். காலாண்டுத் தேர்வு 2019

– திருவள்ளுவர்

**இயல் - 4**

## பெருமாள் திருமொழி

அ.மா.வி 2019; காலாண்டுத் தேர்வு 2019

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

பாசுர எண் : 691 – குலசேகராழ்வார்

**இயல் - 5**

## நீதிவெண்பா

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

– கா.ப. செய்குதம்பிப் பாவலர்

## திருவிளையாடற்புராணம்

### மன்னன், புலவரிடம் மன்னிப்பை வேண்டுதல்

பிடிஏ–5; செப்.–2020

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

– பரஞ்சோதி முனிவர்

பா எண் : 2644

**இயல் - 6**

## முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

### ஆடுக செங்கீரை!

பிடிஏ–4

செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை.

செங்கீரைப் பருவம், பா.எண். 8 – குமரகுருபரர்



Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000

மனப்பாடச் செய்யுள்

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75



# கம்பராமாயணம்

### பாலகாண்டம் – நாட்டுப்படலம்

தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்,
கொண்டல்க முழவி னேங்கக் குவளை கண் விழித்து நோக்கத்,
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகரயாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ. பா.எண். 35

### அயோத்தியா காண்டம் – கங்கைப்படலம்

வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதொ ரதியாவழ குடையான். பா.எண். 1926 – கம்பர்

# திருக்குறள்

குறள் எண்

## அமைச்சு(64)

அ.மா.வி 2019; பிடிஏ–1

4. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்.

## பொருள்செயல் வகை(76)

5. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

## குடிசெயல் வகை(103)

பிடிஏ–6

14. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

## நல்குரவு(105)

15. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

இயல் - 7

# சிலப்பதிகாரம்

### மருவூர்ப் பாக்கம்

அரையாண்டுத் தேர்வு 2019; பிடிஏ–1,6

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;

பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்; இந்திரவிழா ஊரெடுத்த காதை(அடி 18–23) - இளங்கோவடிகள்



www.surabooks.com



Click Here : https://bit.ly/3is7Z75
Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75





இயல் - 8

## காலக்கணிதம்

பிடிஏ–3

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

– கண்ணதாசன்

இயல் - 9

## தேம்பாவணி

### இயற்கை கொண்ட பரிவு

அ.மா.வி 2019; பிடிஏ–2; செப்.–2020

நவமணி வடக்க யில்போல்
  நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
  தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
  துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
  ஒலித்து அழுவ போன்றே.

பா எண் : 2410

– வீரமாமுனிவர்

★ ★ ★

www.surabooks.com



Click Here : https://bit.ly/3is7Z75
Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75



இயல் 1

# அன்னை மொழியே

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## ஆசிரியர் குறிப்பு



| | |
|---|---|
| ஆசிரியர் | : பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
| இயற்பெயர் | : துரை. மாணிக்கம் |
| பெற்றோர் | : தந்தையார் –துரைசாமி – தாயார் – குஞ்சம்மாள் |
| காலம் | : 10.03.1933ஆம் ஆண்டு முதல் 11.06.1995ஆம் ஆண்டு வரை |
| பிறந்த ஊர் | : சேலம் மாவட்டம் |
| இயற்றிய நூல்கள் | : கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப் பறவைகள், நூறாசிரியம், உலகியல் நூறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி. |
| எழுதிய உரைநூல் | : திருக்குறள் மெய்ப்பொருளுரை (தமிழுக்குக் கருவூலமாக அமைந்தது) |
| நடத்திய இதழ்கள் | : தென்மொழி, தமிழ்ச் சிட்டு. |
| சிறப்பு | : பாரதிதாசனின் தலைமாணாக்கர். இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. |

## பாடப்பகுதி

கனிச்சாறு(தொகுதி-1) தொகுப்பிலிருந்து இருவேறு தலைப்புகளில் உள்ள பாடல்கள் (தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்) எடுத்தாளப்பட்டுள்ளன.



## பாடல்

### அழகார்ந்த செந்தமிழே!

**அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!**
**முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!**
**கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்**
**மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!**

## சொல்லும் பொருளும்

| | | |
|---|---|---|
| 1. | அன்னை மொழியே | – தாய்மொழியே |
| 2. | அழகார்ந்த செந்தமிழே | – அழகாய் அமைந்த செழுமையான தமிழே |
| 3. | முன்னைக்கும் முன்னை | – பழமைக்கும் பழமையாய் |
| 4. | முகிழ்த்த நறுங்கனியே | – தோன்றிய இனிமையான கனியே |
| 5. | கடல் கொண்ட | – கடலால் கொள்ளப்பட்ட |
| 6. | கன்னிக் குமரி நாட்டிடையில் | – குமரிக்கண்டத்தில் |
| 7. | மன்னி அரசிருந்த | – நிலைத்து அரசாண்ட |
| 8. | மண்ணுலகப் பேரரசே | – இந்தப் பூவுலகின் பேரரசே |

## பொருளுரை

தாய்மொழியே! அழகே உருவாக அமைந்த செந்தமிழே பழமைக்கும் பழைமையாய்த் தோன்றிய இனிமையான கனியே! கடலால் கொள்ளப்பட்ட குமரிக் கண்டத்தில் நிலையான ஆட்சியைத் தந்த இந்த மண்ணுலகின் பேரரசே!

## விரிவான விளக்கம்

உலகின் மிகப் பழமையான நிலப்பகுதி குமரிக்கண்டம். இது இலெமூரியாக் கண்டம் என்றும் அழைக்கப்பட்டது. அந்நிலப் பகுதி கடல்கோளால் (ஆழிப்பேரலை – சுனாமி (TSUNAMI)) அலை கழிக்கப்பட்டது. அந்தத் திராவிடத்தின் தொன்மையான நிலத்தில் தோன்றிய தமிழ்மொழி செழுமையான மொழி, இனிமையான மொழி என்றும் நிலைத்து நிற்கும் மொழி என்றும், செம்மொழி என்றும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.



Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75





**பாடல்**

**தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!**
**இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!**
**மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!**

**சொல்லும் பொருளும்**

1. தென்னன் மகளே! – பாண்டிய மன்னனின் மகளே!
2. திருக்குறளின் மாண்புகழே! – திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியவளே!
3. இன்னறும் பாப்பத்தே! – இனிமையான பத்துப்பாட்டே!
4. எண்தொகையே! – எட்டுத்தொகையே!
5. நற்கணக்கே! – பதினெண் கீழ்க்கணக்கே!
6. மன்னுஞ் சிலம்பே! – நிலைத்த பெருமையுடைய சிலப்பதிகாரமே!
7. மணிமே கலைவடிவே! – அழகான மணிமேகலையே!
8. முன்னும் நினைவால் – உள்ளத்தில் பொங்கியெழும் சிறப்பான நினைவுகளால்
9. முடிதாழ வாழ்த்துவமே – தலையைத் தாழ்த்தி வணங்குகிறோம்.

**பொருளுரை**

பாண்டிய மன்னனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியவளே! இனிமையான பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே! நிலைத்த பெருமையுடைய சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! உள்ளத்தில் பொங்கியெழும் சிறப்பான நினைவுகளுடன் தலையைத் தாழ்த்தி வணங்குகிறோம்.

**விரிவான விளக்கம்**

முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கம் என முச்சங்கங்கள் அமைத்து தமிழை வளர்த்தவர்கள் தமிழகத்தின் தென்பகுதியை ஆண்டு வந்த பாண்டிய மன்னர்களாவர். எனினும், பாண்டிய மன்னன் மகளே! என ஆசிரியர் குறிப்பிடுகிறார். பின்னர் தமிழ் இலக்கியங்கள் ஒவ்வொன்றையும் குறிப்பிட்டு அந்த இலக்கியங்களாகவே தமிழை உருவகப்படுத்தியுள்ளார்.

பதினெண் மேற்கணக்கு நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியங்களின் வடிவில் அன்னைத் தமிழ் இருக்கிறாள் என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**பாடல்**

**செப்பரிய நின்பெருமை!**

**செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை**
**எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?**
**முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்**
**விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்**

**சொல்லும் பொருளும்**

1. செந்தமிழே! – செழுமையான தமிழே!
2. உள்ளுயிரே – எமக்குள் வாழும் உயிர் போன்றவளே
3. செப்பரிய – சொல்வதற்கு அரிதாக உள்ள
4. நின்பெருமை – உனது பெருமைகளை
5. எந்தமிழ் நா – என்னுடைய தமிழ் நாக்கு
6. எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்? – எவ்விதம் எடுத்து விரிவாகக் கூறும்?
7. முந்தைத் தனிப்புகழும் – பழம்பெருமையும் தனிச் சிறப்பும் கொண்ட
8. முகிழ்த்த இலக்கியமும் – இலக்கியவளத்துடன் தோன்றிய
9. விந்தை நெடுநிலைப்பும் – வியக்கத்தக்க அளவிலான நெடிய நிலைப்புத் தன்மையும்
10. வேறார் புகழுரையும் – வேற்று மொழியார் உன்னைப் பற்றி கூறிய புகழ் உரைகளும்.

**பொருளுரை**

செழுமையான தமிழே! எமக்குள் வாழும் உயிர் போன்றவளே! பழம் பெருமையும், தனிச்சிறப்பும், இலக்கிய வளமும், வியக்கத்தக்க அளவில் நீண்ட நிலைப்புத் தன்மையும் கொண்ட உன்னை வேற்று மொழியார் புகழ்ந்துரைக்கின்றனர். இவ்விதம் சொல்வதற்கு அரிதாக உள்ள உனது பெருமைகளை என்னுடைய தமிழ் நாக்கு எவ்விதம் விரிவாக எடுத்துக் கூறும்?

www.Surabooks.com



Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75



**விரிவான விளக்கம்**

வேற்று மொழியாரும் தமிழின் பெருமைகளை அறிந்து போற்றுகின்றனர். ஆனால் எமக்கோ நீ உயிர் போன்றவள். அளவிட முடியாத அளவு பெருமைகளைக் கொண்டுள்ள உன்னை எப்படிப் புகழ்வது, உன் பெருமைகளை விரிவாக எவ்விதம் என்னால் கூற முடியும்? என்று கேட்பது போல தமிழின் பெருமையை உயர்த்திக் கூறியுள்ளார் ஆசிரியர்.

**பாடல்**

**உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்**
**செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த**
**அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி**
**முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!**

> சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் – என்றன்
> சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்.
> **– க.சச்சிதானந்தன்**

**சொல்லும் பொருளும்**

1. உந்தி உணர்வெழுப்ப – பற்றுணர்வு பொங்கி எழ
2. உள்ளக் கனல்மூளச் – உள்ளத்திலே நெருப்புத் தோன்ற
3. செந்தா மரைத்தேனை – செந்தாமரையில் உள்ள தேனை
4. குடித்துச் சிறகார்ந்த – அருந்திவிட்டுச் சிறகு அசைத்து
5. அந்தும்பி பாடும் – அந்த வண்டானது பாடும்
6. அதுபோல யாம்பாடி – அதைப்போன்று நாங்களும் பாடி
7. தனித்தமிழே! – தனிப் பெருமை வாய்ந்த தமிழே!
8. முழங்க முந்துற்றோம் யாண்டும் – எங்கும் உன் சிறப்பை முழங்குவதால் பெருமையடைகிறோம்

**பொருளுரை**

செந்தாமரையில் உள்ள தேனைக் குடித்துவிட்டு சிறகசைத்துப் பாடும் வண்டினைப் போல் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, பற்றுணர்வு பொங்கி எழ, உன் சிறப்பை எல்லா இடங்களிலும் முழங்குவதில் பெருமையடைகிறோம்.

**விரிவான விளக்கம்**

தாமரை மலரில் உள்ள தேனைக் குடித்துவிட்டு வண்டானது மகிழ்ச்சியில் சிறகசைத்துப் பாடுவது போல, தமிழ் இலக்கியங்களைக் கற்று, அதன் பொருளை உணர்ந்த மகிழ்வில் நாங்களும் மகிழ்ச்சியில் பெருமை பொங்க உன் சிறப்புகளை உலகெங்கும் முழங்குகின்றோம் என ஆசிரியர் கூறுகின்றார்.

**பிரித்தெழுதுக**

| | | | |
|---|---|---|---|
| 1. செந்தமிழ் | – செம்மை + தமிழ் | 6. செப்பரிய | – செப்பு + அரிய |
| 2. நறுங்கனி | – நறுமை + கனி | 7. உணர்வெழுப்ப | – உணர்வு + எழுப்ப |
| 3. நாட்டிடையில் | – நாடு + இடையில் | 8. பேரரசு | – பெருமை + அரசு |
| 4. மண்ணுலகம் | – மண் + உலகம் | 9. எந்தமிழ் நா | – எம் + தமிழ் + நா |
| 5. நற்கணக்கு | – நன்மை + கணக்கு | | |

**இலக்கணக் குறிப்பு**

| | |
|---|---|
| 1. செந்தமிழ், நறுங்கனி, செந்தாமரை, பேரரசு | பண்புத்தொகைகள் |
| 2. முகிழ்த்த, சிறகார்ந்த | பெயரெச்சங்கள் |
| 3. கன்னிக்குமரி, மண்ணுலகம் | உருவகங்கள் |
| 4. தென்னன் மகள் | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| 5. நின்பெருமை | ஆறாம் வேற்றுமைத் தொகை |
| 6. குடித்து | வினையெச்சம் |
| 7. வாழ்த்துவமே, முந்துற்றோம் | தன்மைப் பன்மை வினைமுற்றுகள் |
| 8. யாண்டும் | முற்றும்மை |

அமுத ஊற்று



Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75



## கற்பவை கற்றபின்

1. **"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று**
**இத்திறத்த எட்டுத்தொகை"**
**இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத் தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.**

(i) **நற்றிணை :** நல் + திணை / நன்மை + திணை. 'நல்' என்னும் அடைமொழியும் அகப்பொருள் ஒழுக்கத்தைச் சுட்டும் 'திணை' என்னும் பெயரும் சேர்ந்து 'நற்றிணை' என்னும் பெயர் பெற்றது.

(ii) **குறுந்தொகை :** குறுமை + தொகை. குறைந்த அடிகள் கொண்ட பாடல்களின் தொகுப்பாக இருப்பதால் குறுந்தொகை எனப் பெயர்பெற்றது.

(iii) **ஐங்குறுநூறு :** ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைத் திணை குறித்த குறுகிய நூறு பாடல்களாகத் தொகுக்கப்பட்டதால் 'ஐங்குறுநூறு' எனப் பெயர் பெற்றது.

(iv) **பதிற்றுப்பத்து :** சேர மன்னர்கள் பதின்மரைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய தொகுப்பு நூலாகும். ஒரு மன்னருக்குப் பத்துப் பாடல்கள் என்னும் முறையில் நூறு பாடல்களைக் கொண்டுள்ளதால் 'பதிற்றுப்பத்து' எனப் பெயர் பெற்றது.

(v) **பரிபாடல் :** வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களுக்கும், பல வகை அடிகளுக்கும் பரிந்து இடங்கொடுத்து பரிந்து செல்லும் ஓசையையுடைய பரி பாட்டுகளின் தொகுப்பாக விளங்குவதால் இது 'பரிபாடல்' என்று அழைக்கப்படுகிறது.

(vi) **கலித்தொகை :** ஓசை இனிமையும், தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் சிறப்பான அமைப்புகளையும், கொண்ட கலிப்பாக்களால் அமைந்த நூலாதலால் கலித்தொகை எனப் பெயர் பெற்றுள்ளது.

(vii) **அகநானூறு :** அகம் + நான்கு + நூறு – அகநானூறு. அகப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் 'அகநானூறு' எனப் பெயர் பெற்றது.

(viii) **புறநானூறு :** புறம் + நான்கு + நூறு – புறநானூறு. இது புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் 'புறநானூறு' எனப் பெயர் பெற்றது.

2. **"எந்தமிழ் நா நின் பெருமை எடுத்தே உரைவிரிக்கும்" என்ற பாடலடியைக் கொண்டு வகுப்பறையில் ஐந்து நிமிட உரை நிகழ்த்துக.**

உலகில் உள்ள தொன்மையான மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று என்றால் மிகையாகாது. இன்றும் எழுத்தளவிலும் பேச்சளவிலும் தன் தொன்மையைக் காத்து சீரும் சிறப்போடும் வாழ்ந்து கொண்டிருக்கிறது நம் தமிழ் மொழி.

தமிழ்மொழி தொன்மை, எளிமை, ஒண்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை எனப் பலவகை பெருமைகளை ஒருங்கேயுடையது என்கிறார் ஞா.தேவநேயப் பாவாணர்.

முண்டாசு கவிஞன் மகாகவி பாரதி அவர்கள்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்" என்றார்.

அந்தளவிற்குத் தமிழ்மொழியின் பெருமையை உலகறியும். மேலும் தமிழ்மொழி இயற்கையாகவே பேசுவதற்கு எளிமையாக அமைந்திருப்பதால் நாம் தமிழ் எழுத்துகளை எளிதாக உச்சரிக்கலாம்.

தமிழின் சிறப்பை உணர்ந்த மேலைநாட்டு அறிஞர் டாக்டர் ஜி.யூ.போப்., தமிழை நன்கு கற்று அதன் சிறப்பினை உணர்ந்ததால் தமது கல்லறையில் "இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" என்று பொறிக்கச் செய்தார்.

உலகின் மூத்த மொழி தமிழ்மொழி. மூத்தக்குடி வளர்த்த மொழியாம் தமிழ்மொழி மற்ற மொழிகளைக் காட்டிலும் இனிமையும், பெருமையும் பல்வேறு இலக்கிய தொன்மைகளையும் இயல், இசை, நாடகம் என்று முத்தமிழ் கொண்ட மொழியாம் நம் தமிழ் மொழி, தமிழ்மொழிக்கு ஈடு இணை இவ்வுலகில் எந்த மொழியும் இல்லையென பெருமையாக எடுத்துரைப்பேன்.

எந்தன் தமிழின் பெருமையை உலக அரங்கு முழுக்க எடுத்துரைப்பேன் அதுவே நான் செய்த பாக்கியம் என்று பலரும் கூறுகின்றனர்.



www.surabooks.com



Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75



**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!
தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!

**1. இப்பாடல் இடம்பெற்ற நூலின் பெயர் என்ன?**

அ) பத்துப்பாட்டு　ஆ) கனிச்சாறு
இ) எட்டுத்தொகை　ஈ) நூறாசிரியம்

**விடை ஆ) கனிச்சாறு**

**2. இந்நூலின் ஆசிரியர் யார்?**

அ) கபிலர்　ஆ) ஔவையார்
இ) பெருஞ்சித்திரனார்　ஈ) பாரதியார்

**விடை இ) பெருஞ்சித்திரனார்**

**3. நாட்டிடையில் - பிரித்தெழுதுக.**

அ) நாட்டு + இடையில்　ஆ) நாடு + இடையில்
இ) நாட் + இடையில்　ஈ) நாள் + இடையில்

**விடை ஆ) நாடு + இடையில்**

**4. செந்தமிழ் - இலக்கணக்குறிப்பு தருக.**

அ) உம்மைத்தொகை　ஆ) வினைத்தொகை
இ) பண்புத்தொகை　ஈ) வேற்றுமைத்தொகை.

**விடை இ) பண்புத்தொகை**

**5. மன்னி என்ற சொல்லின் பொருள் யாது?**

அ) நிலைத்து　ஆ) உயர்ந்து
இ) தாழ்ந்து　ஈ) நெகிழ்ந்து

**விடை அ) நிலைத்து**

## அரசு தேர்வு வினாக்கள்

**1. "அன்னை மொழியே" கவிதை இடம் பெறும் நூல்** காலாண்டுத் தேர்வு 2019

அ) நூறாசிரியம்　ஆ) கனிச்சாறு
இ) எண்சுவை　ஈ) பாவியக்கொத்து

**விடை ஆ) கனிச்சாறு**

**2. திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் என்னும் நூலை எழுதியவர் யார்?** காலாண்டுத் தேர்வு 2019

அ) பாவாணர்　ஆ) கால்டுவெல்
இ) இரா. இளங்குமரனார்　ஈ) திரு.வி.க

**விடை ஆ) கால்டுவெல்**

### குறுவினா

**1. "மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!** அ.மா.வி 2019
**தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!"**
**மண்ணுலகப் பேரரசு ....... தென்னன் மகள் ....... திருக்குறளின் மாண்புகழ் ........ மூன்று இடங்களுக்குமான ஒரே விடை என்ன? பாடலின் ஆசிரியர் யார்?**

(i) செந்தமிழ்　(ii) பாவலரேறு பெருஞ்சித்திரனார்

**2. அன்னை மொழியான தமிழை வாழ்த்தும் வாழ்த்துச் சொற்கள் இரண்டினை எழுதுக.** காலாண்டுத் தேர்வு 2019

(i) பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே, பாண்டிய மன்னனின் மகளே!
(ii) திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியவளே! இனிமையான பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே! நிலைத்த பெருமையுடைய சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! உள்ளத்தில் பொங்கியெழும் சிறப்பான நினைவுகளுடன் தலையைத் தாழ்த்தி வணங்குகிறோம்.



www.surabooks.com



Click Here : https://bit.ly/3is7Z75　Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75



## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

1. **பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர்**

அ) துரை.மாணிக்கம் ஆ) தி. இராசகோபாலன்
இ) துரைராசு ஈ) எத்திராசலு **விடை அ) துரை.மாணிக்கம்**

2. **'தென்னன் மகளே!' இத்தொடரில் தென்னன் என்பவர்**

அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன் ஈ) பல்லவன் **விடை இ) பாண்டியன்**

3. **பெருஞ்சித்திரனாரின் எந்தப் படைப்பு தமிழுக்குக் கருவூலமாய் அமைந்தது?**

அ) உலகியல் நூறு ஆ) திருக்குறள் மெய்ப்பொருளுரை
இ) கனிச்சாறு ஈ) எண்சுவை எண்பது
**விடை ஆ) திருக்குறள் மெய்ப்பொருளுரை**

4. **"என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்" என்று கூறியவர்**

அ) ஜி.யு. போப் ஆ) கால்டுவெல்
இ) க.சச்சிதானந்தன் ஈ) ப.சிங்காரம் **விடை இ) க.சச்சிதானந்தன்**

5. **'கனிச்சாறு' என்ற கவிதை நூலைப் படைத்தவர்**

அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆ) தாராபாரதி
இ) வாணிதாசன் ஈ) முடியரசன் **விடை அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

6. **செந்தமிழ் என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்**

அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ்
இ) செம்மை + தமிழ் ஈ) செ + தமிழ் **விடை இ) செம்மை + தமிழ்**

7. **'தும்பி' என்பதன் பொருள்**

அ) வண்ணத்துப்பூச்சி ஆ) தேனீ இ) தட்டான்பூச்சி ஈ) வண்டு **விடை ஈ) வண்டு**

8. **செந்தாமரை என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்**

அ) செந் + தாமரை ஆ) செம் + தாமரை
இ) சிவப்பு + தாமரை ஈ) செம்மை + தாமரை **விடை ஈ) செம்மை + தாமரை**

9. **தமிழன்னையின் மாண்புகழாகக் கவிஞர் வருணித்த நூல் எது?**

அ) திருக்குறள் ஆ) பத்துப்பாட்டு இ) எட்டுத்தொகை ஈ) சிலப்பதிகாரம் **விடை அ) திருக்குறள்**

10. **பாவலரேறு பெருஞ்சித்திரனார் கீழ்க்கண்ட எந்த இதழ்கள் வாயிலாக தமிழுணர்வை உலகெங்கும் பரப்பினார்?**

அ) தென்மொழி, தென்றல் ஆ) தமிழ்ச்சிட்டு, குயில்
இ) தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஈ) நவபாரதி, குயில் **விடை இ) தென்மொழி, தமிழ்ச்சிட்டு**

### குறுவினா

1. **பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள் யாவை?**

**பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள்:** உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, ஐயை எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள் முதலியன.

2. **பெருஞ்சித்திரனார் எமக்குயிர் என எதனைக் கூறுகிறார்?**

பெருஞ்சித்திரனார் தமிழே எமதுயிர் எனக் கூறுகிறார்.

3. **வண்டைப் போல் நாம் என்ன செய்வதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்?**

செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடும் வண்டைப் போல நாம் தமிழைச் சுவைத்து தமிழின் பெருமையை முழங்குவதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

4. **அன்னை மொழிப் பாடலை அழகாக்கும் நூல்கள் யாவை?**

**அன்னை மொழிப் பாடலை அழகாக்கும் நூல்கள் :** திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை.



www.surabooks.com



Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75



**5. தமிழ் எவற்றோடு இணைத்துப் பேசப்படுகிறது?**

விண்ணோடும், முகிலோடும், உடுக்களோடும், கதிரவனோடும், கடலோடும் தமிழ் இணைத்துப் பேசப்படுகிறது.

**6. தமிழ் எவ்வாறு வளர்ந்தது?**

தமிழ், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழாய் வளர்ந்தது.

**7. பெருஞ்சித்திரனார் அன்னை மொழியை வாழ்த்தும் விதத்தை எழுதுக.**

அன்னையே மொழியே! அழகாய் அமைந்த செழுந்தமிழே! பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே! கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே! பாண்டிய மன்னனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே! பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து வாழ்த்துகின்றோம்.

☆ ☆ ☆

மொழி – அமுதஊற்று | உரைநடை உலகம்

# இயல் 1 தமிழ்ச்சொல் வளம்

– தேவநேயப் பாவாணர்

அமுத ஊற்று

## ஆசிரியர் குறிப்பு



'மொழிஞாயிறு' என்று அழைக்கப்படும் தேவநேயப் பாவாணர் பல்வேறு இலக்கணக் கட்டுரைகளையும், மொழி ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியவர். தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர். **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட** இயக்குநராகப் பணியாற்றியவர். **உலகத் தமிழ்க் கழகத்தினை** நிறுவி அதன் தலைவராக இருந்தவர்.

## பாடச் சுருக்கம்

| தாவரங்களின் அடிப்பகுதியைக் குறிக்கும் சொற்கள் | | | |
|---|---|---|---|
| 1. நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடிப்பகுதி | தாள் | 5. கம்பு, சோளம் முதலியவற்றின் அடிப்பகுதி | தட்டு (அ) தட்டை |
| 2. கீரை, வாழை முதலியவற்றின் அடிப்பகுதி | தண்டு | 6. கரும்பின் அடிப்பகுதி | கழி |
| 3. நெட்டி, மிளகாய்ச் செடி முதலியவற்றின் அடிப்பகுதி | கோல் | 7. மூங்கிலின் அடிப்பகுதி | கழை |
| 4. குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடிப்பகுதி | தூறு | 8. புளி, வேம்பு முதலியவற்றின் அடிப்பகுதி | அடி |

| தாவரங்களின் கிளைப் பகுதியைக் குறிக்கும் சொற்கள் | | | |
|---|---|---|---|
| 1. அடிமரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை | கவை | 5. சினையின் பிரிவு | போத்து |
| 2. கவையின் பிரிவு | கொம்பு அல்லது கொப்பு | 6. போத்தின் பிரிவு | குச்சு |
| 3. கொம்பின் பிரிவு | கிளை | 7. குச்சியின் பிரிவு | இணுக்கு |
| 4. கிளையின் பிரிவு | சினை | | |

| காய்ந்த தாவரத்தின் பகுதிகள் (அல்லது) உறுப்புகளின் பெயர்கள் | | | |
|---|---|---|---|
| 1. காய்ந்த குச்சு(குச்சி) | சுள்ளி | 3. காய்ந்த கழி | வெங்கழி |
| 2. காய்ந்த சிறுகிளை | விறகு | 4. காய்ந்த கொம்பு, கவை மற்றும் அடி | கட்டை |

www.surabooks.com



Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75





| தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள் | | | |
|---|---|---|---|
| 1. புளி, வேம்பு முதலியவற்றின் இலை | இலை | 4. தென்னை, பனை முதலியவற்றின் இலை | ஓலை |
| 2. நெல், புல் முதலியவற்றின் இலை | தாள் | 5. காய்ந்த தாள் மற்றும் தோகை | சண்டு |
| 3. சோளம், கரும்பு முதலியவற்றின் இலை | தோகை | 6. காய்ந்த இலை | சருகு |

**தெரிந்து தெளிவோம்** உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய நாடு மலேசியா; அந்த முதல் மொழி தமிழ்.
– பன்மொழிப்புலவர் க.அப்பாத் துரையார்

| தாவரத்தின் நுனிப்பகுதியைக் (கொழுந்து) குறிக்கும் சொற்கள் | | | |
|---|---|---|---|
| 1. நெல், புல் முதலியவற்றின் கொழுந்து | துளிர் அல்லது தளிர் | 3. சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து | குருத்து |
| 2. புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து | முறி கொழுந்து | 4. கரும்பின் நுனிப்பகுதி | கொழுந்தாடை |

| பூவின் நிலைகள் | | | |
|---|---|---|---|
| 1. பூவின் தோற்ற நிலை | அரும்பு | 4. மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை | வீ |
| 2. பூவிரியத் தொடங்கும் நிலை | போது | 5. பூ வாடின நிலை | செம்மல் |
| 3. பூவின் மலர்ந்த நிலை | மலர் (அலர்) | | |

| தாவரத்தின் பிஞ்சு வகைகளைக் குறிக்கும் சொற்கள் | | | |
|---|---|---|---|
| 1. பூவோடு கூடிய இளம்பிஞ்சு | பூம்பிஞ்சு | 7. சிறுகுரும்பை | முட்டுக் குரும்பை |
| 2. இளம் காய் | பிஞ்சு | 8. முற்றாத தேங்காய் | இளநீர் |
| 3. மாம்பிஞ்சு | வடு | 9. இளம்பாக்கு | நுழாய் |
| 4. பலாப்பிஞ்சு | மூசு | 10. இளநெல் | கருக்கல் |
| 5. எள் பிஞ்சு | கவ்வை | 11. வாழைப் பிஞ்சு | கச்சல் |
| 6. தென்னை, பனை முதலியவற்றின் பிஞ்சு | குரும்பை | | |

| தாவரங்களின் குலை வகைகளைக் குறிக்கும் சொற்கள் | | | |
|---|---|---|---|
| 1. அவரை, துவரை முதலியவற்றின் குலை | கொத்து | 4. கேழ்வரகு, சோளம் முதலியவற்றின் கதிர் | கதிர் |
| 2. கொடி முந்திரி போன்றவற்றின் குலை | குலை | 5. நெல், தினை முதலியவற்றின் கதிர் | அலகு (அ) குரல் |
| 3. வாழைக்குலை | தாறு | 6. வாழைத்தாற்றின் பகுதி | சீப்பு |

| கெட்டுப்போன காய்கனி வகையைக் குறிக்கும் சொற்கள் | | | |
|---|---|---|---|
| 1. நுனியில் சுருங்கிய காய் | சூம்பல் | 7. பதராய்ப் போன மிளகாய் | சொண்டு |
| 2. சுருங்கிய பழம் | சிவியல் | 8. கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்டுப்போன காய் | கோட்டான் காய் (அ) கூகைக்காய் |
| 3. புழுபூச்சி அரித்த காய் (அல்லது) கனி | சொத்தை | 9. தேரை அமர்ந்ததினால் கெட்டுப்போன காய் | தேரைக்காய் |
| 4. சூட்டினால் பழுத்த பிஞ்சு | வெம்பல் | 10. தேரை அமர்ந்ததினால் கெட்டுப் போன தேங்காய் | அல்லிக்காய் |



Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75



| | | | |
|---|---|---|---|
| 5. குளுகுளுத்த பழம் | அளியல் | 11. தென்னையில் கெட்ட காய் | ஒல்லிக்காய் |
| 6. குளுகுளுத்து நாறிய பழம் (அல்லது) காய் | அழுகல் | | |

| பழத்தோல் வகையைக் குறிக்கும் சொற்கள் | | | |
|---|---|---|---|
| 1. மிக மெல்லியது | தொலி | 5. சுரையின் ஓடு | குடுக்கை |
| 2. திண்மையானது | தோல் | 6. தேங்காய் நெற்றின் மேற்பகுதி | மட்டை |
| 3. வன்மையானது | தோடு | 7. நெல், கம்பு முதலியவற்றின் மூடி | உமி |
| 4. மிக வன்மையானது | ஓடு | 8. வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமி | கொம்மை |

| மணி வகைகளுக்கு (தானியங்கள்) வழங்கும் சொற்கள் | | | |
|---|---|---|---|
| 1. நெல், புல்(கம்பு) முதலிய தானியங்கள் | கூலம் | 6. வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின் வித்து | முத்து |
| 2. அவரை, உளுந்து முதலியவை | பயறு | 7. மா, பனை முதலியவற்றின் வித்து | கொட்டை |
| 3. வேர்க்கடலை, கொண்டைக் கடலை முதலியவை | கடலை | 8. தென்னையின் வித்து | தேங்காய் |
| 4. கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து | விதை | 9. அவரை, துவரை முதலியவற்றின் பயறுகள் | முதிரை |
| 5. புளி, காஞ்சிரை (நச்சுமரம்) முதலியவற்றின் வித்து | காழ் | | |

| இளம் பயிர் வகைகளுக்கு வழங்கும் சொற்கள் | | | |
|---|---|---|---|
| 1. நெல், கத்தரி முதலியவற்றின் இளநிலை | நாற்று | 5. விளாவின் இளநிலை | குட்டி |
| 2. மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை | கன்று | 7. பனையின் இளநிலை | மடலி (அ) வடலி |
| 3. வாழையின் இளநிலை | குருத்து | 8. நெல், சோளம் முதலியவற்றின் பசும் பயிர் | பைங்கூழ் |
| 4. தென்னையின் இளநிலை | பிள்ளை | | |

- வடநாட்டில் கோதுமை வகைகளில் சம்பாக் கோதுமை, குண்டுக்கோதுமை, வாற்கோதுமை முதலிய சில வகைகள் மட்டுமே உள்ளன.
- **தமிழ்நாட்டின் நெல் வகைகள்:** செந்நெல், வெண்ணெல், கார்நெல், சம்பா, மட்டை, கார் என்ற பல வகைகள் உள்ளன.
- **சம்பா நெல்லின் வகைகள்:** ஆவிரம்பூச் சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய **60 உள் வகைகள்** உள்ளன.
- **தமிழ்நாட்டைத் தவிர வேறெங்கும் விளையாத சிறு கூலங்கள்:** வரகு, காடைக் கண்ணி, குதிரைவாலி.

## தெரிந்து தெளிவோம்

**தமிழ்த் திரு இரா. இளகுமரனார்**

1. திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள அல்லூரில் '**திருவள்ளுவர் தவச்சாலை**' மற்றும் '**பாவாணர் நூலகம்**' ஒன்றை உருவாக்கியுள்ளார். விழிகளை இழந்துவிட்டால்கூட தாய்த் தமிழினை இழக்கக்கூடாது என்பதால் தமிழ்த்தென்றல் திரு.வி.க. போன்று இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டார்.
   **இவருடைய படைப்புகளில் சில :** இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், பாவாணர் வரலாறு, குண்டலகேசி உரை, யாப்பருங்கலம் உரை, புறத்திரட்டு உரை, திருக்குறள் தமிழ் மரபுரை, காக்கைப் பாடினிய உரை, தேவநேயம். **சிறப்பு :** சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்.

2. போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் லிசுபனில் 1554–இல் கார்டிலா என்னும் நூல் முதன்முதலாகத் தமிழ் மொழியில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூல் ரோமன் வரிவடிவில் அச்சிடப்பட்டுள்ளது. இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் அச்சேறிய முதல்மொழி தமிழ்தான்.

**– ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்**





Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75



## கற்பவை கற்றபின்

1. **பின்வரும் நிலவகைகளின் பெயர்களுக்கான காரணங்களைக் கேட்டறிந்து வகுப்பறையில் பகிர்க.**

தரிசு, சிவல், கரிசல், முரம்பு, புறம்போக்கு, சுவல், அவல்.

(i) தரிசு – சாகுபடி செய்யப்படாமல் கிடக்கும் நிலம்.
(ii) சிவல் – சிவப்பு நிறமாக இருக்கும் நிலம்.
(iii) கரிசல் – கருப்பு நிறம் கொண்ட மண் உள்ள நிலம்.
(iv) முரம்பு – பருக்கை கல்லுள்ள மேட்டு நிலம்
(v) புறம்போக்கு – அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்களைப் புறம்போக்கு என்பர்.
(vi) சுவல் – மேடான பகுதியிலுள்ள நிலம்
(vii) அவல் – பள்ளமான பகுதியிலுள்ள நிலம்

2. **ஒரு பொருள் தரும் பல சொற்களைப் பட்டியலிடுக.**

எ.கா. : சொல்லுதல் – பேசுதல், விளம்புதல், செப்புதல், உரைத்தல், கூறல், இயம்புதல், மொழிதல்
(i) கிளி – தத்தை, சுகம், கிள்ளை
(ii) குழந்தை – மகவு, குழவி, சேய், பிள்ளை
(iii) சூரியன் – ஞாயிறு, கதிரவன், பகலோன், பரிதி
(iv) நெருப்பு – தீ, அனல், கனல், சுடர்
(v) சொல் – பதம், கிளவி, மொழி
(vi) பெண் – நங்கை, மங்கை
(vii) வயல் – கழனி, தரிசு, பழனம், செய், காணி.



### பின்வரும் உரைநடைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

1. **சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும், தமிழ்மட்டும் அதில் தலைசிறந்ததாகும். தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத் தெளிவாகத் தோன்றும். தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமின்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் உள என்கிறார் கால்டுவெல் (திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம்).**

### வினாக்கள்.

1. இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவானது எது? **விடை** சொல்வளம்
2. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் நூலை எழுதியவர் யார்? **விடை** கால்டுவெல்
3. தமிழில் உள்ளவை – பிற திராவிட மொழிகளில் இல்லாதவை எவை? **விடை** ஒரு பொருட் பல சொல்
4. பிறமொழிச் சொற்களைப் பற்றி ஆராய பயன்பட்டவை எவை? **விடை** அகராதி
5. இப்பத்திக்கான தலைப்பு எழுதுக. **விடை** நதமிழ்ச்சொல்வளம்

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக.

1. **இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர்** பிடிஏ–2

அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார்
இ) தேவநேயப் பாவாணர் ஈ) இரா.இளங்குமரனார்

**விடை** ஈ) இரா. இளங்குமரனார்

### விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.

1. **ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள் அமைந்திருக்கும்.** பிடிஏ–3

மக்களின் அறிவொழுக்கங்கள் எவ்வாறு அமைந்திருக்கும்?



Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75



**2.** **சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு இரா.இளங்குமரனார்.** பிடிஏ–3

சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் யார்?

## குறுவினா

**1.** **தமிழ்ச்சொல் வளம் குறித்து கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.** பிடிஏ–1

தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன என்கிறார் கால்டுவெல்.

**2.** **தமிழ்நாட்டு நெல்வகைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.** அ.மா.வி 2019

தமிழ்நாட்டு நெல்லில் செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.

**3.** **தாவரத்தின் நுனிப் பகுதிகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?** காலாண்டுத் தேர்வு 2019

தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்களைக் கொழுந்து என்கிறோம்.

| | |
|---|---|
| நெல், புல் | – துளிர் (அ) தளிர் |
| புளி, வேம்பு | – முறி (அ) கொழுந்து |
| சோளம், கரும்பு, தென்னை, பனை | – குருத்து |
| கரும்பின் நுனிப் பகுதி | – கொழுந்தாடை எனப்படும். |

**4.** **பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரையார் குறித்து எழுதுக.** அரையாண்டுத் தேர்வு 2019

குமரி மாவட்டம் ஆரல்வாய் மொழியில் 24-6-1907இல் பிறந்தார். தமிழ்நாட்டு மொழியியல் வல்லுநர்களுள் ஒருவர். பன்மொழிப்புலவர் எனப் பெயர் பெற்றவர். **இவர் எழுதிய நூல்கள்:** குமரிக் கண்டம், தென்னாட்டுப் போர்க்களங்கள்.

# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக.

**1.** **கீழ்கண்டவற்றில் அடிவகையைக் குறிக்கும் சொல் எது?**
அ) தாள் ஆ) கவை இ) தோகை ஈ) துளிர்
விடை **அ) தாள்**

**2.** **குருத்து என்பது**
அ) கிளைப்பிரிவு ஆ) அடிவகை இ) இலை வகை ஈ) கொழுந்து வகை
விடை **ஈ) கொழுந்து வகை**

**3.** **கச்சல் என்பது**
அ) வாழைப்பிஞ்சு ஆ) மாம்பிஞ்சு இ) பலாப்பிஞ்சு ஈ) எள் பிஞ்சு
விடை **அ) வாழைப்பிஞ்சு**

**4.** **உலகத்திலேயே ஒரு மொழிக்காக (தமிழ்) உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?**
அ) தமிழ்நாடு ஆ) இலங்கை இ) மலேசியா ஈ) சிங்கப்பூர்
விடை **இ) மலேசியா**

**5.** **இரா. இளங்குமரனார் திருவள்ளுவர் தவச்சாலை மற்றும் பாவாணர் நூலகத்தை எந்த ஊரில் அமைந்துள்ளார்**
அ) பெரம்பலூர் ஆ) ஜெயங்கொண்டம்
இ) அல்லூர் ஈ) தஞ்சாவூர்
விடை **இ) அல்லூர்**

**6.** **இரா. இளங்குமரனார் இமைகளை மூடியபடி எழுதுவதற்கு யாரை முன்னோடியாகக் கொண்டார்?**
அ) தேவநேயப் பாவாணர் ஆ) தமிழ்த்தென்றல் திரு.வி.க.
இ) க.அப்பாத்துரையார் ஈ) பெருஞ்சித்திரனார்
விடை **ஆ) தமிழ்த்தென்றல் திரு.வி.க.**

**7.** **செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர்**
அ) தேவநேயப் பாவாணர் ஆ) உ.வே. சாமிநாதர்
இ) திரு.வி.கல்யாண சுந்தரனார் ஈ) இரா.பி.சேதுப்பிள்ளை
விடை **அ) தேவநேயப் பாவாணர்**

**8.** **தேவநேயப் பாவாணரின் சிறப்புப் பெயர் எது?**
அ) சொல்லின் செல்வர் ஆ) மொழிஞாயிறு
இ) தமிழ்த்தென்றல் ஈ) இரண்டாம் நக்கீரர்
விடை **ஆ) மொழிஞாயிறு**



www.surabooks.com



Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000

Click Here to Learn more: https://bit.ly/3is7Z75


**9. "நாடும் மொழியும் நமதிரு கண்கள்" என்று கூறியவர்**

அ) ஜி.யூ. போப் ஆ) கால்டுவேல்

இ) பாரதியார் ஈ) ப.சிங்காரம்

**விடை இ) பாரதியார்**

**10. 'தமிழ்ச்சொல் வளம்' என்ற கட்டுரையின் ஆசிரியர்**

அ) இலக்குவனார் ஆ) இரா.பி.சேதுப்பிள்ளை

இ) மு.வரதராசனார் ஈ) தேவநேயப் பாவாணர்

**விடை ஈ) தேவநேயப் பாவாணர்**

## குறுவினா

**1. இரா. இளங்குமரனார், யாரைப் போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றிருந்தார்?**

இரா. இளங்குமரனார், தமிழ்த் தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றிருந்தார்.

**2. எதனை இழக்கக் கூடாதென்று இரா.இளங்குமரனார் கூறுகிறார்?**

விழிகளை இழக்க நேரிட்டாலும் தாய்த்தமிழை இழக்கக் கூடாதென்று இரா. இளங்குமரனார் கூறுகிறார்.

**3. காய்ந்த தாவர வகைகள் எவ்வாறு பெயர் பெறுகின்றன?**

காய்ந்த குச்சு **சுள்ளி** எனவும், சிறுகிளை **விறகென**வும், காய்ந்த கழி **வெங்கழி**யெனவும் காய்ந்த கொம்பும், கவையும், அடியும் **கட்டை** எனவும் பெயர் பெறுகின்றன.

**4. தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.**

புளி, வேம்பு இவற்றின் இலை, **இலை** எனவே வழங்கப்படுகிறது. நெல், புல் இவற்றின் இலை **தாள்** எனவும், சோளம், கரும்பு இவற்றின் இலை **தோகை** எனவும், தென்னை, பனை இவற்றின் இலை **ஓலை** எனவும், காய்ந்த தாளும், தோகையும் **சண்டென**வும், காய்ந்த இலை **சருகு** எனவும் வழங்கப்பெறும்.

**5. பூவின் நிலைகளை எழுதுக.**

பூவின் தோற்ற நிலை **அரும்பு** எனவும், பூவிரியத் தொடங்கும் நிலை **போது** எனவும், பூ மலர்ந்த நிலை **மலர்** அல்லது **அலர்** எனவும், மரஞ்செடியிலிருந்து பூ கீழே விழுந்த நிலை **வீ** எனவும், பூ வாடிய நிலை **செம்மல்** எனவும், பூவின் நிலைகள் குறிக்கப்படுகின்றன.

**6. தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் பெயர்களை எழுதுக.**

பூவோடு கூடிய இளம்பிஞ்சு பூம் பிஞ்சு எனவும், இளங்காய் பிஞ்சு எனவும், மாப்பிஞ்சு வடு எனவும், பலாப்பிஞ்சு மூசு எனவும், தென்னை, பனை முதலியவற்றின் இளம்பிஞ்சு குரும்பை எனவும், சிறுகுரும்பை முட்டுக் குரும்பை எனவும், முற்றாத தேங்காய் இளநீர் எனவும், இளம்பாக்கு நுழாய் எனவும், இளநெல் கருக்கல் எனவும், வாழைப்பிஞ்சு கச்சல் எனவும் வழங்கப்படுகிறது.

**7. பழத்தோல் வகைகளுக்கான பெயர்களை எழுதுக.**

**பழங்களின் மேற்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள்:** மிக மெல்லிய மேற்பகுதி தொலி, திண்ணமானது தோல், வன்மையானது தோடு, மிக வன்மையானது ஓடு, சுரையின் ஓடு குடுக்கை, தேங்காய் நெற்றின் மேற்பகுதி மட்டை, நெல், கம்பின் மூடி உமி, வரகு, கேழ்வரகு இவற்றின் உமி கொம்மை எனப் பல்வேறு பெயர்களால் குறிக்கப்படுகிறது.

**8. தானிய மணிகளுக்கு வழங்கும் பெயர்களை எழுதுக.**

(i) நெல், கம்பு முதலியவை கூலம் என வழங்கப்படும்.

(ii) அவரை, உளுந்து முதலியவை பயறு எனப்படும்.

(iii) வேர்க்கடலை, கொண்டைக்கடலை முதலியவை கடலை எனப்படும். கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து விதை எனப்படும்.

(iv) புளி, காஞ்சிரை இவற்றின் வித்து காழ் என்றும், வேம்பு, ஆமணக்கு இவற்றின் வித்து முத்து என்றும் அழைக்கப்படும்.

(v) மா, பனையின் வித்து கொட்டையாகும். தென்னையின் வித்து தேங்காய் எனப்படும்.

(vi) அவரை, துவரை முதலிய பயறு வகைகள் முதிரை எனப்படும்.

**9. தாவரங்களின் இளம் பயிர் வகைக்கான சொற்களை எழுதுக.**

(i) நெல், கத்தரி – நாற்று

(ii) மா, புளி, வாழை – கன்று

(iii) வாழையின் இளநிலை – குருத்து

(iv) தென்னையின் இளநிலை – பிள்ளை

(v) விளாவின் இளநிலை – குட்டி

(vi) பனையின் இளநிலை – மடலி (அ) வடலி

(vii) நெல், சோளம் இவற்றின் பசும்பயிர் – பைங்கூழ்

இயல் 1

www.surabooks.com


Click Here : https://bit.ly/3is7Z75 Ph: 9600175757 / 8124201000